# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 02 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

## நாவலர் எழுந்தார்

**01 இக்கட்டுரையின் ஆசிரியர் யார்? எத்தொகுப்பில் இடம்பெற்றது?**

**02 "பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி எழுந்த**

**கொழுங்கனல் என்ன எழுந்தார்...**

அ. இங்கு எழுந்தார் எனக் கம்பரால் கூறப்படுபவர்? எவ்விலக்கியம் ?

ஆ. எழுந்தார் எனக் கட்டுரையாசிரியரால் கூறப்படுபவர்?

இ. கொழுங்கனல் என்பதன் கருத்து யாது?

**03. " மாக மடங்கலும் மால் விடையும் பொன்னாகமும்**

**நாகமும் நாண நடந்தார்...**

அ. நடந்தார் எனக் கட்டுரையாசிரியரால் கூறப்படுபவர்?

ஆ. மடங்கல், மால்விடை என்பதன் பொருள் யாது?

இ. இங்கு நாகம் என்பது குறிக்கும் இருவிதமான கருத்து?

**04 "விலகு பிள்ளை... அது கிடக்க எடுத்துக் கொண்டு வா**
**தந்தி தபாற் கட்டுக்களை.. எல்லோரும் பிரமித்துப் போனார்கள்...**

அ. இக் கூற்றைக் கூறியவர் யார்?

ஆ. பிள்ளை என நாவலரால் குறிப்பாக விளிக்கபட்டவர் யார்?

**05. வாதமகா சபை எங்கே? நடைபெற்றது. எதற்காக நடைபெற்றது.**

**06. சென்னை சர்வகலாசாலையார் முதன் முதலில் நடாத்திய பி. ஏ பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தவர் இருவரும் யாவர்?**

**07. இந்த இருவரும் இலங்கை சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்கு போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.. இந்த இருவர் எனப்படுவோர் யாவர்?**

**08. அன்றை அக் கூட்டத்திற்கு தலமை தாங்க வேண்டியவர் யார்? தலமை தாங்கியவர் யார்?**

**09. "பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்கின்ற...** இங்கு **பிரசண்டமாருதம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

**10. நல்லூர் கந்தசுவாமி கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது...**

அ. கோயிலாருக்கு ஏற்பட்டாளர் யார்?

ஆ. பிராமணர்களுக்கு ஏற்பட்டாளர் யார்?

**11. அவர் தனது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ் சொல்வது வழக்கம்..**

அ. இங்கு அவர் எனப்படுபவர் யார்?

ஆ. ஆவாகனம் என்பது குறிக்கும் கருத்து யாது?

இ. அங்கவஸ்திரம் என்பது என்ன?

**12. இக் கட்டுரையில், கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் யார் யாரென கூறப்பட்டுள்ளது?**

**13. "இலங்கை சட்டசபையில் ஓரிலங்கைச்சிவப்பாய் இருந்து விளங்கினார்" என்பதனால் விளக்கப்படுவது யாது?**

**14. கூட்ட மண்டபத்தில் நாவலர் இருந்த நிலையை கட்டுரையாசிரியார் எவ்வாறு காட்டுகிறார்?**

**15. பிறிற்றோ பற்றி பண்டிதமணி அவர்கள் யாது கூறுகின்றார்.**

**16. சேர் பொன் இராமநாதன் பற்றி பண்டிதமணி அவர்கள் யாது கூறுகின்றார்.**

**17. விசுவநாதப்பிள்ளை பற்றி பண்டிதமணி அவர்கள் யாது கூறுகின்றார்.**

**18. நாவலர் நேர்மை மற்றும் திறமை என்பன பற்றி குறிப்பிடுக?**

**19. பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்கள் என கட்டுரையில் காட்டப்படுபவை யாவை?**

**20. நாவலர் எழுந்த விதம், நடந்து சென்ற தன்மை என்பனவற்றை பண்டிதமணி அவர்கள் கம்பராமாயண பாடலடிகள் மூலம் எவ்வாறு காட்டுகின்றார்.**